## புதிதாகப் பொறுப்புக்கு வந்துள்ளவர்களின் பணி சிறக்க வாழ்த்துகள்!

# 2026 - தேர்தலில் பாசிஸ்ட்டுகளை வீழ்த்த இளைஞர் அணியினர் களப்பணியாற்றுவீர்!

## தேனி மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறைகூவல்!

தேனி, ஜூன் 19-

**தேனியில் நடைபெற்ற தேனி தெற்கு மற்றும் வடக்கு மாவட்டத்துக்குட்பட்ட ஒன்றிய நகர பேரூருக்குப் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர் களின் அறிமுகக் கூட்டத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு புதிதாகப் பொறுப்புக்கு வந்துள்ளவர்களின் பணி சிறக்க வாழ்த்தி சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர் 'மிக முக்கியமாக 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் அடிமைகள்- காவிகளின் கூட்டணியை வீழ்த்துகிற பொறுப்பு, இளைஞர் அணிக்கு அதிகமாக உள்ளது என்பதை உணர்ந்து களப்பணியாற்ற வேண்டும்' என எடுத்துரைத்தார்.**

இக்கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் - துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:-

தேனி தெற்கு மற்றும் வடக்கு மாவட்டக் கழக இளைஞர் அணியின் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களாகிய உங்களை எல்லாம் சந்திப்பதில், மிகுந்த பெருமை அடைகிறேன்.

### நெருக்கமான பொறுப்பு!

இளைஞர் அணியின் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களாகப் பொறுப்பேற்றுள்ள 252 பேருக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே பலமுறை சொல்லி இருக்கிறேன். தற்போது திரும்பவும் சொல்கிறேன். சட்டமன்ற உறுப்பினர், விளையாட்டுத்துறை அமைச்சர், இப்போது துணை முதலமைச்சர் இவையெல்லாம் பெருமை மிகுந்த பொறுப்பு. ஆனால், எனது நெஞ்சுக்கு எப்போதுமே மிகவும் நெருக்கமான பொறுப்பு என்றால், அது கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் என்ற பொறுப்புதான். அந்தப் பாச உணர்வோடு இன்றைக்கு இந்த நிகழ்ச்சியில் என் குடும்பத்தைப் பார்க்கிற உணர்வோடு உங்களை பார்க்கிறேன். கழகத்தில் ஏற்கனவே 23 அணிகள் இருக்கின்றன. சென்ற பொதுக்குழுவில் தலைவர் அவர்கள் புதிதாக இரண்டு அணிகளை உருவாக்கி இருக்கிறார்கள். ஒன்று மாற்றுத்திறனாளிகள் அணி, இன்னொன்று கல்வியாளர்கள் அணி.

இப்படி கழகத்தில் 25 அணிகள் இருந்தாலும், கழகத்தின் இதயம் என்று சொன்னால், அது நம் தலைவர் அவர்கள் உருவாக்கிய இளைஞர் அணிதான். கலைஞர் அவர்களால் தொடர்ந்து பாராட்டுகளைப் பெற்ற அணி, இயக்கத்தின் முதன்மை அணி என்று பாராட்டப்பட்ட அணியும் இளைஞர் அணிதான். இளைஞர் அணியில் இருப்பதே நமக்கெல்லாம் ஒரு பெருமை. இளைஞர் அணியின் வரலாற்றை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

### இளைஞர் அணி!

இன்றைக்குப் பல்வேறு இயக்கங்களில் இளைஞர் அணி இருக்கிறது. ஆனால், இந்தியாவிலேயே இளைஞர் அணி என்று ஆரம்பித்தது, நம் இயக்கத்தில்தான். அதை ஆரம்பித்தது நம் தலைவர் அவர்கள்தான். நம் இளைஞர் அணிக்கு மட்டும்தான் மிகப் பெரிய வரலாறு இருக்கிறது. அப்படிப்பட்ட இளைஞர் அணியில் இன்றைக்கு நீங்கள் எல்லாம் பொறுப்பிற்கு வந்து இருக்கிறீர்கள். ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் என்ற மிகப்பெரிய பொறுப்பிற்கு வந்து இருக்கிறீர்கள். நீங்கள் சாதாரணமாக வந்துவிடவில்லை. ஏதோவொரு பரிந்துரைக் கடிதத்தை வாங்கிவிட்டு வந்துவிடவில்லை. அதை நான் தைரியமாக, தெம்பாகச் சொல்வேன். ஏனென்றால், உங்களைத் தேர்வு செய்தது நான்.

அந்தப் பொறுப்பை எனக்குக் கொடுத்தது தலைவர் அவர்கள். அதற்கு எனக்குத் துணையாக இருந்தது உங்களின் மாவட்டக் கழகச் செயலாளர்கள், உங்களின் மாவட்ட அமைப்பாளர்கள். பல கட்டங்களுக்குப் பிறகு உங்களைப் பார்த்துப் பார்த்துதான் நியமனம் செய்திருக்கிறோம்.

மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களின் பரிந்துரைகளையும் வாங்கி இருக்கிறோம். ஆனால், அது மட்டுமே தகுதி கிடையாது. அது மட்டுமல்ல, சென்ற வருடம் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் ஒவ்வொரு மாவட்டமாக சென்று, அங்கு நேர்காணல் நடத்தி அவர்கள் கொடுத்த பட்டியலின் அடிப்படையிலும், ஏற்கெனவே இருக்கின்ற நிர்வாகிகள் பல வருடங்களாகச் செய்து இருக்கின்ற பணிகளை எல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டும்தான் அந்த நியமனங்களை நாங்கள் செய்து இருக்கிறோம். இந்த நியமனங்களை நிறைவு செய்வதற்குள் நாங்கள் பட்ட சிரமங்கள் எங்களுக்குதான் தெரியும். கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் செலவிட்டோம். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறைந்தது இரண்டு மணி நேரம் ஆனது.

### முரசொலியில் அறிவிப்பு!

உங்கள் மாவட்டச் செயலாளரின் பரிந்துரைக் கடிதத்துடன், மண்டல பொறுப்பாளர் சகோதரர் ஜி.பி. ராஜா, உங்கள் மாவட்ட அமைப்பாளர்கள் ஆஜிப்கான், செஞ்சுரி செல்வம், அன்பகம் செந்தில் ஆகியோருடன் நான் மாதக் கணக்கில் உட்கார்ந்து, ஒவ்வொரு மாவட்டமாக இறுதி செய்து, 100 சதவிகிதம் பணி முடித்து, முரசொலியில் அறிவிப்பு வந்து விட்டது.

நீங்கள் எல்லாம் பார்த்துப் பார்த்து வடிகட்டி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள். உங்கள் ஒவ்வொருவரையும் நாங்கள் தனித்தனியாக தேர்ந்தெடுத்து இருக்கிறோம். உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் இந்தப் பொறுப்பு, பதவி கிடையாது. மிகப் பெரிய பொறுப்பு. அதை நீங்கள் மிகுந்த பொறுப்புடன் உணர்ந்து, இந்தப் பொறுப்புக்கு ஏற்றவாறு பணியாற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தலைவருக்கும் இருக்கிறது. மாவட்டக் கழகச் செயலாளர், உங்கள் மாவட்ட அமைப்பாளருக்கும் இருக்கிறது.

உங்கள் மாவட்ட அமைப்பாளர் பல்வேறு சிரமங்களைக் கடந்து உங்களைத் தேர்வு செய்திருக்கிறார். எனவே மாவட்ட அமைப்பாளரின் பெயரைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு, உங்களுக்கு இருக்கிறது. அதை நீங்கள் உணர்வீர்கள் என்று நம்புகிறேன். இங்கு மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களும் வருகை தந்துள்ளார்கள். இளைஞர் அணி இன்றைக்கு கழகத்தின் முதன்மை அணியாக வளர்ந்து இருக்கிறது என்றால், அதற்கு இங்கு வந்து இருக்கின்ற மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களின் பணிகள்தான் காரணம். அவர்களும் இளைஞர் அணியில் இருந்து வந்தவர்கள்தான்.



பல்வேறு அணிகளில் இருந்து இருப்பார்கள். உழைத்து இந்த நிலைமைக்கு வந்து இருக்கிறார்கள். எனவே, அவர்களின் வழிகாட்டுதல்கள் நமக்கு மிகமிக அவசியம் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

### வழிகாட்டுதலுடன் செய்யுங்கள்!

இன்றைக்கு இந்த இளைஞர்களைப் பொறுப்புக்குத் தேர்ந்தெடுத்து இருக்கிறோம். கிட்டத்தட்ட பாதிக்கும் மேற்பட்டோர் புதியவர்கள். பொறுப்புக்கு வந்திருக்கின்ற இளைஞர் அணியினர், நமக்கு பொறுப்பு கிடைத்து விட்டது என்று நீங்கள் இருந்துவிடக் கூடாது. இனிமேல்தான் அந்தப் பொறுப்பிற்கான அர்த்தத்தை நீங்கள் கூட்ட வேண்டும். பொறுப்பு கிடைத்துவிட்டது என்று சும்மா இருந்துவிடக் கூடாது.

இளைஞர் அணி என்பது ஒரு சார்பு அணி. ஆகவே, நீங்கள் என்ன பணிகளை செய்தாலும், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களின் அனுமதி இல்லாமல், அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லாமல், அதை செய்யக்கூடாது. அன்பகத்தில் இருந்து என்ன பணிகள் சொன்னாலும் சரி, தலைவர் என்ன கட்டளை இட்டாலும் சரி, தலைமைக் கழகத்திலிருந்து இளைஞர் அணிக்கு என்ன கட்டளை இட்டாலும் சரி, அதையெல்லாம் நீங்கள் ஒன்றிய அமைப்பாளராக இருந்தால், ஒன்றியச் செயலாளரிடம் சொல்லிவிட்டுதான் செய்ய வேண்டும். அதேபோல் நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நகர, பேரூர் கழகச் செயலாளர்களிடம் கலந்துரையாடிவிட்டு, அவர்களிடம் அனுமதி வாங்கிவிட்டு அவர்களின் வழிகாட்டுதலுடன் செய்ய வேண்டும். நமக்கு இல்லாத அனுபவம் கண்டிப்பாக அவர்களுக்கு இருக்கும். அதில் ஏதாவது உங்களுக்குப் பிரச்சினை இருந்தால் அன்பகத்திற்கு சொல்லுங்கள். அதை சரி செய்ய வேண்டியது எங்கள் பொறுப்பு.

### நீங்கள் உணர வேண்டும்!

கழகத்தின் அடித்தளம் என்னவென்று பார்த்தீர்கள் என்றால், அது ஒன்றிய, நகர, பேரூர் அமைப்புகள்தான். அதேபோல் இளைஞர் அணிக்கும் அடித்தளமாக இருக்கக்கூடியது ஒன்றிய, நகர, பேரூர் வரை இயங்குகின்ற இளைஞர் அணியின் நிர்வாகிகள் நீங்கள்தான். நீங்கள் எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடியும், சரியாக இருக்க வேண்டும். கவனத்துடன் இருக்க வேண்டும். எந்தவொரு சிறிய தவறுக்கும் இடம் கொடுக்கக்கூடாது.

இன்றைக்கு எதிர்க்கட்சிகள் நம் மீது எந்தக் குறையும் சொல்வதற்கு இடம் இல்லாமல் ஏதாவது ஒரு சின்ன தவறு நடந்து விடுமா? அதை பெரிதாக பூதாகரமாக்கி நமது இயக்கத்திற்கும், நம் தலைவருக்கும், அரசுக்கும் ஏதாவது ஒரு கெட்ட பெயரை ஏற்படுத்தி விட முடியுமா? என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை நீங்கள் உணர வேண்டும். மிகவும் கவனமாகச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இளைஞர் அணியைப் பொறுத்தவரை களத்தில் நீங்கள் வேலை செய்தால், உங்களுக்கான அங்கீகாரம் கிடைக்கவேண்டிய நேரத்தில் நிச்சயமாகக் கிடைக்கும். அதற்கு ஒரு சின்ன உதாரணம் இந்த மேடையிலேயே சொல்கிறேன். நம் மாநில துணை செயலாளர் ஜி.பி.ராஜா அவர்கள், தலைவரால் நியமிக்கப்பட்டவர். பல வருடங்களாக மதுரை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக சிறப்பாகச் செயல்பட்டு, இன்றைக்கு மாநில துணைச் செயலாளராக பொறுப்பு உயர்வு பெற்று இருக்கிறார்.

### உங்களின் பணிகளுக்கு ஆதாரம்!

இளைஞர் அணியில் சிறப்பாக செயல்பட்ட பலர் இன்றைக்கு தாய்க்கழகத்தில் மிகப்பெரிய பொறுப்பில் இருக்கிறார்கள். பல உதாரணங்கள் இருக்கின்றன. எனவே, இதையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் சிறப்பாகப் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உங்களின் பணிகளை நாங்கள் தொடர்ந்து பார்த்துக்கொண்டு, கவனித்துக்கொண்டே இருப்போம். நிச்சயம் நான் ஒவ்வொருவரையும் பார்த்துக் கொண்டு, விசாரித்துக் கொண்டே இருப்பேன். இங்கு உள்ளே வரும்போது உங்கள் ஒவ்வொருவரையும் பார்த்தேன். உங்கள் அனைவரையும் பார்க்கும்பொழுது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. உங்கள் ஒவ்வொருவரின் கையிலும் 'மினிட் புக்' வைத்திருந்தீர்கள். நான் ஒவ்வொரு நேர்காணலிலும், நேர்காணலுக்கு வருபவர்களிடம் கேட்பது மினிட் புக்தான். இப்போது அனைவரும் அலைபேசியைத்தான் காட்டுகிறார்கள். சரிதான், தொழில்நுட்பம் வளர வேண்டும். ஆனால் 'மினிட் புக்' என்பது உங்களுக்குக் கூடுதல் பொறுப்பு. தயவுசெய்து எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் அதைப் பதிவிடுங்கள். அப்போது கையெழுத்து வாங்க முடியாவிட்டாலும், வேறொரு சந்தர்ப்பம் வரும்பொழுது கையெழுத்து வாங்குங்கள். நிகழ்ச்சியில் கலந்து கொண்டாலும் சரி, நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தாலும் சரி, 'மினிட் புக்'கை நல்ல ஒரு ஆவணமாகப் பயன்படுத்தலாம். மினிட் புக்தான் உங்களின் பணிக்கு ஒரு ஆதாரம். நாளைக்கு யாராவது உங்களை குறை சொன்னால், இந்த நிகழ்ச்சிக்கு வரவே இல்லை, எந்த நிகழ்ச்சியும் நடத்தவில்லை என்று சொன்னால் கூட அந்த மினிட் புக்கை எடுத்து ஆதாரமாகக் காட்டலாம். எனவே மினிட் புக்கை சரியாகப் பராமரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### இல்லந்தோறும் இளைஞர் அணி!

இளைஞர் அணி சார்பாக, பல்வேறு பணிகளை நாம் செய்து கொண்டிருக்கிறோம். சில மாதங்களாக 'இல்லந்தோறும் இளைஞர் அணி' என்ற முன்னெடுப்பை ஆரம்பித்தோம். இளைஞர் அணிக்கு வீடு, வீடாகச் சென்று அரசின் சாதனைகளை, நம் தலைவரின் சாதனைகளை, இளைஞர் அணி செய்திருக்கக்கூடிய போராட்டங்களை, முன்னெடுப்புகளை எல்லாம் சொல்லி ஏன் இளைஞர் அணியில் இளைஞர்கள் சேர வேண்டும் என்று ஒவ்வொரு வீடாக ஏறி, இறங்கி இல்லந்தோறும் இளைஞர் அணி மூலம் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை, நம் இளைஞர் அணியில் சேர்த்திருக்கிறோம். அந்தப் பணியைப் புதிய நிர்வாகிகள் நீங்கள் வேகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கழகத்தின் கொள்கைகளை, வரலாற்றை, இளைஞர் அணியின் வரலாற்றைச் சொல்லி அவர்கள் ஏன் தி.மு.க. இளைஞர் அணியில் சேர வேண்டும் என்பதை அவர்களுக்குப் புரிய வைத்து அவர்களைச் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். `ஓரணியில் தமிழ்நாடு' என்ற உறுப்பினர் சேர்க்கையை முன்னெடுக்க வேண்டும் என்று பொதுக்குழுவில் தலைவர் கட்டளை இட்டிருக்கிறார். உங்கள் மாவட்டக் கழகச் செயலாளர் அதை எப்படிச் செய்ய வேண்டும் என்ற அறிவிப்பை வெளியிடுவார். அந்தப் பணியிலும் நீங்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களின் வழிகாட்டுதலுடன், அதில் நீங்கள் முழுகவனம் செலுத்த வேண்டும். கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, இளைஞர் அணிக்கு தலைவர் அவர்கள் கொடுத்த மூன்று கட்டளைகளில் முக்கியமான ஒன்று, சட்டமன்ற தொகுதிதோறும் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை திறக்க வேண்டும் என்பது. எந்த இயக்கத்திற்கும் இப்படி ஒரு வரலாறு கிடையாது. தமிழ்நாடு முழுக்க இந்த ஒரு வருடத்தில் மட்டும் கிட்டத்தட்ட 100 சட்டமன்றத் தொகுதிகளில் இளைஞர் அணி சார்பாக கலைஞர் நூற்றாண்டு நூலகங்களைத் திறந்து இருக்கிறோம். இது ஒரு மிகப்பெரிய சாதனை. அதிலும் குறிப்பாக, இந்த தேனி மாவட்டத்தில் இருக்கின்ற கம்பம், பெரியகுளம் தொகுதிகளில் ஏற்கெனவே கலைஞர் நூலகத்தைத் திறந்து விட்டோம்.

### 200 சிறந்த இளம் பேச்சாளர்கள்!

ஆண்டிப்பட்டி, போடி தொகுதிகளில் விரைவில் நூலகங்கள் திறக்கப்பட உள்ளன. அந்த நூலகங்களை நல்ல முறையில் நீங்கள் பராமரிக்க வேண்டும். மாணவர்கள், இளைஞர்கள், மகளிரை அந்த நூலகங்களுக்கு நீங்கள் அழைத்து வந்து அவர்களை பயன்படுத்த அறிவுறுத்துங்கள்.

இளைஞர் அணி சார்பாக கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு தலைவர் அவர்கள் கொடுத்த இன்னொரு பணி, 'என் உயிரினும் மேலான' என்ற பேச்சுப் போட்டியை நடத்தி, 100 சிறந்த இளம் பேச்சாளர்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்க வேண்டும் என்று கட்டளையிட்டார்கள். நம் மாவட்டக் கழகச் செயலாளர்களின் ஒத்துழைப்போடும், அவர்களின் வழிகாட்டுதலோடும், ஒவ்வொரு மாவட்ட அமைப்பாளர்களும் துணை அமைப்பாளர்களும் சிறப்பாகப் பணியாற்றி கிட்டத்தட்ட இன்றைக்கு 200 சிறந்த இளம் பேச்சாளர்களை தலைமைக் கழகத்திற்கு ஒப்படைத்து இருக்கிறோம். அந்த வெற்றிக்கு காரணம், இங்கு வந்திருக்கின்ற இளைஞர் அணி தம்பிமார்கள் நீங்கள்தான். நீங்கள் இல்லை என்றால் அது நடந்திருக்காது.

நம் இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டம் திருச்சியில் நடந்தது. அப்போது நான் நன்றி சொன்னேன். நீங்க எல்லாம் படித்திருக்கும்போதுகூட கல்லூரிக்குச் சென்று இருக்க மாட்டீர்கள். ஆனால், இங்கு வந்து இருக்கின்ற ஒவ்வொரு மாவட்ட அமைப்பாளர்களும், துணை அமைப்பாளர்களும் ஒவ்வொரு கல்லூரியாக ஏறி இறங்கி, நன்றாகப் பேசக்கூடிய இளம் பேச்சாளர்களைக் கொண்டு வந்து கழகத்தில் சேர்த்து இருக்கிறீர்கள், உங்களுக்கு எனது மிகப் பெரிய பாராட்டு என்று சொன்னேன்.

இன்றைக்கு அந்த இளம் பேச்சாளர்கள் கழகத்தின் பேச்சாளர்களைப் போல, சிறப்பாக தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்து பல்வேறு கூட்டங்கள், தெருமுனைப் பிரச்சாரங்களில் பேசிக்கொண்டு வருகிறார்கள். கழகத்தின் மாவட்டக் கழகச் செயலாளர்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள். தலைமைக் கழக பேச்சாளர்களைப் போல், இப்போதே இளம் பேச்சாளர்கள் வேகமாகப் பேசுகிறார்கள், நன்றாகப் பேசுகிறார்கள் என்று பாராட்டுகிறார்கள் என்றால், அந்தப் பெருமையும் இளைஞர் அணிக்குதான். அந்தப் பெருமையை நமக்குக் கொடுத்தது தலைவர் அவர்கள்தான். எனவே, அவர்களை எல்லாம் வைத்துக் கொண்டு மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்களின் ஒப்புதலுடன், ஒன்றிய, நகர, பேரூர் அளவில் சிறு சிறு தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்களை நடத்துங்கள்.

### சமூக வலைதளப் பயிற்சி!

பாகத்திற்கு ஒருவரைத் தேர்ந்தெடுத்து, சமூக வலைதளப் பயிற்சி வகுப்பையும் தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகிறோம். உங்களுக்குத் தெரியும். பார்த்து இருப்பீர்கள் கலந்து கொண்டிருப்பீர்கள். விரைவிலேயே மாவட்டத்திற்கு ஒரு சமூக வலைத்தள துணை அமைப்பாளரையும் நியமிக்க இருக்கிறோம்.

இன்றைக்கு இந்தக் கூட்டம் முடிந்தவுடன், அதற்கான நேர்காணல் இருக்கிறது. அதுமட்டுமல்ல, மாநகர, பேரூர், வார்டுகள் மற்றும் ஒன்றியத்திற்கு கீழ் வருகின்ற உள்ளாட்சிகளுக்கான அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களையும் விரைவில் தேர்ந்தெடுத்து, அதற்கான அறிவிப்பு, முரசொலியில் வரும்.

இந்த பணிகளுக்கான அறிவிப்புகள் வந்தால், தமிழ்நாடு முழுவதும் நம் இளைஞர் அணியில் மட்டும் குறைந்தது 5 லட்சம் பேர் நிர்வாகிகளாக மட்டுமே இருப்பார்கள். நான் பெருமையாக, தைரியமாகச் சொல்கிறேன். இந்தியாவில் எந்த ஒரு இயக்கத்திற்கும் சார்பு அணிக்கு என்று இப்படி ஒரு சாதனையும், வரலாறும் கிடையாது. எனவே இப்படி பல்வேறு பணிகளைச் செய்து கொண்டு வருகிறோம். இதையெல்லாம் புரிந்து கொண்டு நீங்கள் களத்தில் உழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

நாம் சார்பு அணிதானே நமக்கான மரியாதை கொடுக்க மாட்டேன் என்கிறார்கள், நமக்கான முக்கியத்துவம் இல்லை என்று எந்த நேரத்திலும் நீங்கள் நினைத்து விடக்கூடாது. உங்கள் கட்டுப்பாட்டில் ஒரு 150 வாக்குகள், நான் சொன்னால் இந்த 150 வாக்காளர்களும், நான் யாருக்கு ஓட்டு போடச் சொல்கிறேனோ அவர்களுக்குத்தான் போடுவார்கள் என்று உங்களிடம் கட்டுப்பாடு இருந்தால், உங்களை யாராலும் தட்டிக்கழிக்க முடியாது. அங்கேதான் உங்களின் முக்கியத்துவம் இருக்கிறது. அதற்காகத்தான் சொல்கிறேன் மக்களோடு மக்களாக இருங்கள். மக்களிடம் தினமும் பேசுங்கள். அவர்களின் குறைகளைக் கேளுங்கள்.

அதை செய்து முடிக்க முடிகிறதா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால், அதை காது கொடுத்து கேட்கிறோம் இல்லையா அதுவே அவர்களுக்கு பெரிய நிம்மதி. நமது குறைகளைக் கேட்பதற்காவது வருகிறார்கள் என்று நினைப்பார்கள். அதை உங்கள் அளவில் செய்து கொடுக்க முடிந்தால் முயற்சி செய்யுங்கள். அப்படி இல்லை என்றால், உங்கள் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களிடம் சொல்லுங்கள். இல்லை என்றால், உங்கள் சட்டமன்ற உறுப்பினரிடம் சொல்லுங்கள், இல்லை என்றால் இளைஞர் அணி தலைமை அலுவலகம் அன்பகத்திற்கு அனுப்புங்கள் அதை செய்து கொடுப்பதற்கான பணிகளில் நாம் ஈடுபட வேண்டும்.

### சுயமரியாதை ஆட்சி!

இன்றைக்கு தமிழ்நாடு ஒரு முக்கியமான தேர்தலை எதிர்நோக்கி காத்துக் கொண்டிருக்கிறது. இன்னும் எட்டு மாதத்தில் தேர்தல் வர இருக்கிறது. புதிய கல்விக் கொள்கை என்று சொல்லி ஒன்றிய பா.ஜ.க அரசு இந்தியை எப்படியாவது தமிழ்நாட்டிற்குள் கொண்டு வர முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நல்ல வேலை இப்போது மட்டும் அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தது என்றால், நம்மில் பாதி பேர் இந்தியில் பேசிக்கொண்டிருந்திருப்போம். அந்த நிலைமையை எடப்பாடி பழனிசாமி அவர்கள் ஏற்படுத்தி இருப்பார். மும்மொழிக் கொள்கை இல்லை, 10 மொழிக்கொள்கையைக் கொண்டு வந்தாலும் கொண்டு வாருங்கள் என்று அவரே சென்று, கையெழுத்துப் போட்டு கொண்டு வந்தாலும் வந்திருப்பார். ஆனால், இன்றைக்கு அவையெல்லாம் நடக்காததற்கு காரணம், இங்கு நடப்பது ஒரு சுயமரியாதை ஆட்சி, திராவிட மாடல் ஆட்சி, தமிழ்நாட்டின் முதல்வராக அமர்ந்து இருப்பது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

அதனால்தான் சங்கிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எந்த வழியிலும் தமிழ்நாட்டிற்குள் நுழைய முடியவில்லையே! தொடர்ந்து நமக்கு தோல்வியையே கொடுத்துக் கொண்டிருக்கிறார்களே!' என்று அவர்கள் என்னென்னமோ முயற்சி செய்கிறார்கள். அ.தி.மு.க.வோடு சேர்ந்து வருகிறார்கள், அடுத்த தேர்தலில் அ.தி.மு.கவும் இல்லை என்று வருகிறார்கள்.

சில மாதங்களுக்கு முன்பு எடப்பாடி பழனிசாமி அவர்கள் என்ன சொன்னார்? 2026 தேர்தலில் இல்லை, 2036 தேர்தலிலும் பா.ஜ.க.வோடு கூட்டணி இல்லை என்று சொன்னாரா இல்லையா? சொல்லிவிட்டு என்ன செய்தார்.

### அலங்கோலமான கூட்டணி!

டெல்லிக்குச் சென்று, மூன்று கார்கள் மாறி மறைமுகமாகச் சந்தித்து விட்டு வந்து, இங்கு சென்னையில் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தினார்கள். இப்படிப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பை எங்கேயாவது பார்த்து இருக்கிறீர்களா? அமித் ஷா அவர்கள் பேசுகிறார். அருகில் எடப்பாடி பழனிசாமி, அவர் பாட்டுக்கு அமைதியாக உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர் என்ன பேசுகிறார் என்று இவருக்குத் தெரியவில்லை. இப்படி ஒரு அலங்கோலமான கூட்டணி. ஆனால், நம் தலைவர் அவர்களுக்கு 10 வருடங்களாக தமிழ்நாட்டு மக்கள் தொடர் வெற்றியைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதற்கு நம் பலமான கூட்டணியும் ஒரு காரணம். ஏனென்றால், தலைவர் அவர்கள் தொடர்ந்து சொல்கிறார்கள், கூட்டணிக் கட்சித் தலைவர்களும் சொல்கிறார்கள். ஏன் இந்த கூட்டணி வெல்கிறது என்றால், இது தேர்தலுக்காக அமைக்கப்படுகின்ற கூட்டணி கிடையாது. இது ஒரு கொள்கைக் கூட்டணி. நமது கூட்டணியை எப்படியாவது உடைத்து விட வேண்டும் என்று முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் நம் தலைவர் அவர்கள் நிச்சயமாக இந்த முறையும் ஒரு வெற்றிக் கூட்டணியை அமைப்பார்.

### தொகுதி மறுவரையறை!

தொகுதி மறுவரையைறை என்ற ஒன்றைக் கொண்டு வருகிறார்கள். தமிழ்நாட்டில் இப்போது 39 எம்.பி. தொகுதிகள் இருக்கின்றன. அந்தத் தொகுதி மறுவரையறை மட்டும் வந்ததென்றால், அவை குறைக்கப்பட்டு 31 தொகுதிகளாகிவிடும். ஒவ்வொரு தேர்தலிலும் நமது உரிமைகளை விட்டுக் கொடுத்து விட்டுகொடுத்துப் போய்க் கொண்டிருக்கிறோம். அதனால்தான் தலைவர் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முறையாக தென்னகத்தில் இருக்கின்ற அனைத்து முதலமைச்சர்களையும் வைத்துக் கொண்டு ஒரு கூட்டத்தை நடத்தினார். இவற்றையெல்லாம் பார்த்து சங்கி கூட்டத்தால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. முன்பெல்லாம் நாம் ஏதாவது செய்தால் எதிர்ப்பார்கள். இப்போது நாம் செய்வதற்கு முன்பே எதிர்க்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

இப்படி அனைவருக்குமான முதலமைச்சராக, தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல இந்தியாவில் உள்ள அனைத்து மாநில முதலமைச்சர்களுக்காகவும் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார் நமது தலைவர். அதில் வெற்றியும் பெற்றுக்கொண்டு வருகிறார். இவற்றையெல்லாம் பொறுத்துக் கொள்ள முடியாமல்தான் பல்வேறு வகைகளில் அவர்கள் தாக்குதல் நடத்துகிறார்கள். அ.தி.மு.கவினரை இன்றைக்கு பா.ஜ.க. மிரட்டி அவர்களை அடிபணிய வைத்து அந்த கூட்டணியை உருவாக்கி இருக்கிறார்கள். அந்தக் கூட்டணி ஆட்சிக்கு வந்தது என்றால் தமிழ்நாட்டிற்கு மும்மொழிக் கொள்கை வந்துவிடும், தொகுதி மறுவரையறை வந்து விடும், புதிய கல்விக் கொள்கை வந்துவிடும்.

புதிய கல்விக்கொள்கையை ஏன் நாம் எதிர்க்கிறோம். அதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். புதிய கல்விக் கொள்கையில் மும்மொழிக் கொள்கையைக் கொண்டு வருகிறார்கள். குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் பள்ளி கல்வித்துறைக்கு கொடுக்க வேண்டிய 2,500 கோடி ரூபாயைத் தருவோம் என்று அதை நிறுத்தி வைத்திருக்கிறது ஒன்றிய அரசு. ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்கள் வெளிப்படையாகச் சொன்னார். தமிழ்நாடு மட்டும் இந்தப் புதிய கல்விக்கொள்கையை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்கிறார்கள். புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால் மட்டும்தான் 2,500 கோடி ரூபாயை கொடுப்போம் என்று கூறினார்.

2,500 கோடி இல்லை, நீ பத்தாயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும், உன் புதிய கல்விக் கொள்கையை எந்த நாளும் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று கூறிவிட்டார் நமது முதலமைச்சர். இப்படி, தைரியமாகச் சொன்ன ஒரே முதலமைச்சர் நம் முதலமைச்சர்தான். இன்றைக்கு நாம் எப்படி புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாமல் எதிர்ப்பு தெரிவிக்கிறோமோ, இப்போது மற்ற மாநிலங்களிலும் அதை புரிந்துகொண்டு அவர்களும் எதிர்ப்பு தெரிவிக்க ஆரம்பித்து இருக்கிறார்கள்.

### பொறுப்பு நமக்கு இருக்கிறது!

இன்றைக்கு பாசிஸ்ட்டுகள் என்னென்னமோ வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். பா.ஜ.கவின் அனைத்து சூழ்ச்சிகளையும் முறியடித்து, அதை வென்று காட்ட வேண்டிய பொறுப்பு யாருக்கு இருக்கிறதோ இல்லையோ? தி.மு.கவினரான நமக்கு இருக்கிறது. அதிலும் குறிப்பாக, இளைஞர் அணிக்கு அதிகமாக இருக்கிறது என்பதை நீங்கள் உணர வேண்டும். அதைத் தொடர்ந்து மக்களுக்கு நினைவூட்டுங்கள்.

மகளிர் விடியல் பயணத்திட்டத்தில் தேனி மாவட்டத்தில் மட்டும் இந்த 4 வருடத்தில் 33 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். அரசுப் பள்ளி மாணவர்கள் உயர் கல்வி படிக்க வேண்டும் என்பதற்காக புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டங்களை நம் அரசு உருவாக்கியுள்ளது. இந்தத் திட்டத்தில் 13,000 மாணவ, மாணவிகள் தேனி மாவட்டத்தில் மட்டும் பயன்பெற்று இருக்கிறார்கள்.

இந்தியாவிலேயே முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில், ஒவ்வொரு நாளும் 22 லட்சம் மாணவர்கள் பயன்பெறுகிறார்கள். தேனி மாவட்டத்தில் மட்டும் 3 லட்சத்து 12 ஆயிரம் குழந்தைகள் தினமும் பயனடைந்து வருகிறார்கள்.

### மகளிர் உரிமைத் தொகை!

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் ஒவ்வொரு மாதமும் 1 கோடியே 16 லட்சம் மகளிர் பயன்பெற்று வருகிறார்கள். தேனி மாவட்டத்தில் மட்டும் 2 லட்சத்து 20 ஆயிரம் மகளிர் மாதம் ஆயிரம் ரூபாய் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதில் ஒரு சில குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். இன்றைக்கு தஞ்சாவூரில் தலைவர் அவர்கள் அறிவித்துவிட்டார். வருகின்ற ஜூலை 15ஆம் தேதி தமிழ்நாடு முழுக்க கிட்டத்தட்ட 10,000 முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவித்து இருக்கிறார். அதில் அவர்கள் விண்ணப்பங்கள் எல்லாம் மீண்டும் பெறப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டு நிச்சயமாக தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும், மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் ரூபாய் நிச்சயமாக சென்று சேரும்.

இதையெல்லாம் நீங்கள் மக்களிடம் எடுத்துச் சென்று தொடர்ந்து பிரச்சாரம் செய்யுங்கள். இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகள் உங்களால் முடிந்த அளவிற்கு மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வையுங்கள். 2026ல் 200 தொகுதிகள் வெற்றி பெற வேண்டும் என்று நம் தலைவர் அவர்கள் நமக்கு இலக்கு கொடுத்திருக்கிறார்கள்.

நான் சென்ற நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்திற்குச் செல்லும் பொழுதும், அதற்கு முன்பு சட்டமன்றத் தேர்தலின்போதும் சரி, அங்கு இருக்கின்ற மாவட்டக் கழகச் செயலாளர்களிடம், வேட்பாளர்களிடம் ஒரு வாக்குறுதி கொடுத்தேன். நிச்சயமாக உங்களின் வெற்றிக்கு எங்கள் இளைஞர் அணி தம்பிமார்கள் உறுதுணையாக இருப்பார்கள். தேர்தல் வெற்றிக்குப் பிறகு நீங்களே அதைச் சொல்வீர்கள் என்று சொல்வேன்.

அதேபோல், தேர்தல் வெற்றிக்குப் பிறகு ஒவ்வொரு மாவட்டத்திற்குச் செல்லும்போதும் மாவட்டச் செயலாளர்கள் பெருமையாகப் பேசுவார்கள். இந்த தம்பி இளைஞர் அணியில் இருந்து சிறப்பாக வேலை பார்த்தார். தேர்தல் வெற்றிக்கு இளைஞர் அணியின் உழைப்பு மிக மிக முக்கியம் என்று சொல்வார்கள். அதை நான் இந்த சட்டமன்றத் தேர்தலில் எதிர்பார்க்கிறேன்.

உங்களை நம்பி அந்த வாக்குறுதியை நிச்சயம் கொடுக்கப்போகிறேன். இந்தத் தேர்தல் வெற்றிக்கு மிக மிக முக்கியமான காரணமாக நம் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களின் பங்கு நிச்சயமாக இருக்க வேண்டும் என்று சொல்லி, 200 இல்லை 200க்கும் மேல் கழக அணி வெற்றி பெற வேண்டும் என்றால், அதற்கு இளைஞர் அணியின் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்களான உங்களின் பணி, மிக மிக முக்கியமானதாக இருக்க வேண்டும். அதை நீங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதி வெற்றி பெற வேண்டும் என்றால் இந்த தேனி மாவட்டத்தில் இருக்கின்ற பெரியகுளம், கம்பம், ஆண்டிப்பட்டி, முக்கியமாக போடி என நான்கு தொகுதிகளிலும் கழக அணி வெற்றி பெறுகின்ற வகையில், நமது இளைஞர் அணியின் உழைப்பு இருக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு, ஏழாவது முறையாக கழகம் ஆட்சி அமைக்க வேண்டும், 2வது முறையாக தொடர்ச்சியாக நம் தலைவர் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பில் அமர வேண்டும் என்றால், நாம் களத்தில் இறங்கி செயல்பட வேண்டும் என்ற உறுதிமொழியை ஏற்றுக்கொண்டு, தேனி வடக்கு, தெற்கு மாவட்ட இளைஞர் அணியின் ஒன்றிய, நகர, பேரூர் புதிய நிர்வாகிகள், உங்களின் பணிகள் அனைத்தும் சிறக்க எனது வாழ்த்துகளை தெரிவித்து, மீண்டும் விரைவில் சந்திப்போம் கூறிக் கொண்டு விடுகிறேன்.

இவ்வாறு அவர் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்!

இக்கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் கம்பம் இராமகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் மகாராஜன், சரவணக் குமார், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் செஞ்சுரி செல்வம், ஆஜிப்கான், மாவட்ட துணை அமைப்பாளர்கள் பரணீஸ்வரன், செல்லதுரை, ஜெயக்குமார், தேவேந்திரன், முத்துராம்ஜி, சுகுமாரன், பிரபாகரன், அபுதாகீர், இராமகிருஷ்ணன், ஸ்டீபன்ராஜ், வி.கே.முருகன், தேனி வடக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஜெகதீஷ்வரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.